# அலகு தேர்வு - 4

## மேல்நிலை முதலாம் ஆண்டு------- கணக்குப்பதிவியல்

## அலகு 5 - இருப்பாய்வு

**காலம் : 45 நிமிடம்** **மதிப்பெண்கள் : 40**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 × 1 = 5

1 ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது -----
(அ) ஆண்டு இறுதியில் (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில் (இ) ஒரு பருவகாலம் முடிந்ததும்

2 பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது -----
(அ) வியாபாரக்கணக்கு (ஆ) இருப்பாய்வு (இ) குறிப்பேடு

3. இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப் பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு ------------
(அ) வியாபாரகணக்கு (ஆ) வேறுபாட்டு கணக்கு (இ) அனாமத்து கணக்கு

4. பேரேட்டிலுள்ள அனைத்துக் கணக்குகளின் பற்று இருப்புகள் மற்றும் வரவு இருப்புகளைக் காட்டும் அறிக்கை ------ எனப்படும்.
(அ) இருப்புநிலைக் குறிப்பு (ஆ) இருப்பாய்வு (இ) திருத்தப் பதிவு

5. இருப்பாய்வு தயாரிக்கும்போது, கணக்காளர் இருப்பாய்வின் பற்றுப் பக்கத்தில் மொத்த தொகை ₹. 500 குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்தவேறுபாட்டினை அவர் என்னசெய்வார்?
(அ) அனாமத்து கணக்கில் பற்று செய்வார் (ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார்
(இ) ஏதேனும் பற்று இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

### பகுதி --- II

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 6- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 3 × 2 = 6

6. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவி?

7. இருப்பாய்வு என்றால் என்ன?

8. கீழ்க்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.
1. முதல் 2. விற்பனை 3. கடனாளிகள் 4. கடனீந்தோர்

9. பின்வரும் விவரங்களைக் கொண்டு இருப்பாய்வினை தயார் செய்யவும்.

| கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) | கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) |
|---|---|---|---|
| வாடகை | 7,000 | காப்பீட்டு முனைமம் | 1,200 |
| சட்டச் செலவுகள் | 3,000 | முதல் | 11,200 |

### பகுதி --- III

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 10 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 3 × 3 = 9

10. இருப்பாய்வு தயாரிப்பதின் நோக்கங்கள் யாவை?

11. “இருப்பாய்வு என்பது கணக்கேடுகளில் உள்ள கணக்கீட்டின் சரித்தன்மையை அறிய உதவும் முதல் ஆதார ஆவணமாகும்” என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? காரணம் கூறவும்.

12. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக:
1. வெளித்தூக்குக்கூலி 2. வாராக்கடன் 3. வட்டிச் செலுத்தியது
4. விற்பனைத்திருப்பம் 5. தொடக்கச் சரக்கிருப்பு 6. பயணச்செலவுகள்



13. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) | கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | கடனாளி | 1,50,000 |
| வங்கிகடன் | 75,000 | சரக்கிருப்பு | 35,000 |
| விற்பனை | 1,60,000 | கடனீந்தோர் | 50,000 |

14. பின்வரும் இருப்பாய்வினை சரிசெய்யவும்.

| விவரம் | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|
| முதல் | 1,20,000 | |
| விற்பனை | | 75,000 |
| கொள்முதல் | 45,000 | |
| சம்பளம் | 6,000 | |
| வாடகை | 4,500 | |
| காப்பீட்டு முனைமம் | | 900 |
| எடுப்புகள் | | 15,000 |
| இயந்திரம் | 84,000 | |
| வங்கி | | 13,500 |
| ரொக்கம் | 13,500 | |
| பற்பலகடனாளிகள் | | 23,100 |
| பற்பல கடனீந்தோர் | 10,500 | |
| மொத்தம் | 2,05,500 | 2,05,500 |

### பகுதி --- IV

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். 4 × 5 = 20

15. திரு. பிரகாஷ் அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31. 12. 2017 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க.

| | ₹. | | ₹. |
|---|---|---|---|
| முதல் | 34,000 | காப்பு நிதி | 4,500 |
| கடனாளிகள் | 10,000 | பெற்ற கழிவு | 1,000 |
| சரக்கிருப்பு | 8,200 | கடனீந்தோர் | 7,000 |
| விற்பனை | 4,200 | காப்பு நிதி | 4,500 |
| எடுப்புகள் | 7,000 | உள்ஏற்றிச் செல் செலவு | 1,500 |

16. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு திரு. பரணி அவர்களின் 2016 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| கட்டடம் | 20,000 | நன்கொடை அளித்தது | 2,500 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 3,000 | பெற்றக்கடன் | 42,000 |
| கடனாளிகள் | 20,000 | போக்குவரத்து செலவுகள் | 3,500 |
| வங்கி ரொக்கம் | 16,800 | சம்பளம் | 5,600 |
| காப்பீடு செலுத்தியது | 1,600 | முதல் | 40,000 |
| வாடகைப் பெற்றது | 5,000 | அறைகலன் | 10,000 |
| புனையுரிமை | 5,000 | மோட்டார் வாகனம் | 5,000 |

17. திரு. பாபு ஏடுகளிலிருந்து 31.3.2017 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும். ஏதேனும் வேறுபாடு இருப்பின் அதனை அனாமத்துக் கணக்கிற்கு மாற்றவும்.

| விவரம் | தொகை ₹ | விவரம் | தொகை ₹ |
|---|---|---|---|
| சரிகட்டப்பட்ட கொள்முதல் | 60,000 | விளம்பரம் | 4,000 |
| வாடகை செலுத்தியது | 2,000 | பொதுச் செலவுகள் | 1,000 |
| தள்ளுபடி பெற்றது | 1,000 | கழிவுசெலுத்தியது | 1,500 |
| உள்தூக்குக் கூலி | 2,700 | முதல் | 40,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 18,600 | விற்பனை | 48,000 |

18. திரு.மதன் என்பவர் ஒரு அறைகலன் கடை நடத்தி வருகிறார். அவர் தன்னுடைய பேரேட்டு இருப்புகளிலிருந்து இருப்பாய்வு ஒன்றை தயாரித்துள்ளார். அந்த இருப்பாய்வு சமன் படவில்லை. அவர் அதனை சரியாக தயாரித்துள்ளாரா என்பதனை கண்டறிக.

| விவரம் | பே.ப.எ | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|---|
| முதல் | | | 4,20,000 |
| கட்டடம் | | 1,15,000 | |
| இயந்திரம் | | | 60,000 |
| அறைகலன் கொண்டுவர செலவு செய்தது | | 79,000 | |
| தொடக்கச் சரக்கிருப்பு | | | 86,000 |
| கொள்முதல் | | | 94,000 |
| விற்பனை | | 1,96,000 | |
| பற்பல கடனாளிகள் | | 16,200 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கீடு | | | 7,300 |
| கைவச ரொக்கம் | | | 25,000 |
| வங்கிவச ரொக்கம் | | 84,700 | |
| சம்பளம் | | | 94,000 |
| வாடகை செலுத்தியது | | 48,000 | |
| அளித்த கழிவு | | 1,400 | |
| வருமான வரி | | 5,800 | |
| காப்பீடு | | 2,400 | |
| பொதுச் செலவுகள் | | | 800 |
| கடனீந்தோர் | | | 89,000 |
| மொத்தம் | | 5,48,500 | 8,76,100 |



19. கீழ்க்கண்ட இருப்பாய்வில் சில பிழைகள் உள்ளன. அவற்றை சரி செய்து மீண்டும் ஒரு இருப்பாய்வைத் தயாரிக்கவும்

| விவரம் | பே.ப.எ | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|---|
| முதல் | | 2,49,000 | |
| பொதுச் செலவுகள் | | | 97,000 |
| இயந்திரம் | | 1,18,680 | |
| சம்பளம் | | 14,400 | |
| வாராக் கடன் | | 1,100 | |
| விற்பனை | | | 3,30,720 |
| கழிவு செலுத்தியது | | 5,500 | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 7,700 | |
| வங்கி மேல்வரைப்பற்று | | | 28,600 |
| தள்ளுபடி அளித்தது | | | 1,210 |
| எடுப்பு | | 24,000 | |
| கட்டடம் | | | 78,000 |
| சரக்கிருப்பு | | | 1,32,400 |
| காப்பீடு | | | 2,610 |
| கடன் (வ) | | | 75,000 |
| கொள்முதல் | | 2,10,800 | |
| பொதுக்காப்பு | | 15,000 | |
| கையிருப்பு | | 25,320 | |
| கடனீந்தோர் | | | 5,000 |
| மொத்தம் | | 7,11,020 | 7,11,020 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

# அலகு தேர்வு - 5

## மேல்நிலை முதலாம் ஆண்டு------- கணக்குப்பதிவியல்

# அலகு 6 - துணை ஏடுகள் - I

**காலம் : 45 நிமிடம்** **மதிப்பெண்கள் : 40**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 × 1 = 5

1 விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?

(அ) அனைத்து சரக்குகளின் விற்பனை (ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

(இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

2 கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது -----------

(அ) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு

(ஆ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறமல் திருப்பிய சொத்துகள்

(இ) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது

3. இயந்திரம் கடனுக்கு வாங்கியது பதிவு செய்யவேண்டிய ஏடு -----------

(அ) கொள்முதல் ஏடு (ஆ) விற்பனை ஏடு (இ) உரிய குறிப்பேடு

4. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல?

(அ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது

(ஆ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது

(இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது

5. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்

(அ) உரிய குறிப்பேடு (ஆ) பேரேடு (இ) கொள்முதல் ஏடு

## பகுதி --- II

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 6- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 4 × 2 = 8

6. ஏதேனும் நான்கு துணை ஏடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.

7. பற்றுக் குறிப்பு என்றால் என்ன?

8. கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எந்த துணையேட்டில் பதிய வேண்டும்

அ) ராமனிடமிருந்து சரக்குகளை வாங்கியது ₹.10,000/-

ஆ) ₹. 3000 மதிப்புள்ள சரக்குகளை கவிதா என்பவருக்கு விற்றதில் தரம் குறைவாக இருக்கிறது என்று அவர் சரக்கை திருப்பினார்

9. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கொள்முதல் ஏட்டினை தயார் செய்க

| | | | |
|---|---|---|---|
| 2017 ஜுலை | 1 | ரமேஷிடமிருந்து கடனா சரக்கு வாங்கியது | ₹. 1,000 |
| ஜுலை | 5 | சுந்தரிடமிருந்து ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | ₹.1,500 |
| | 10 | குமாரிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | ₹. 2,200 |

10. 2017 டிசம்பர், 31-ல், கணக்கேடுகளின் படி இயந்திரத்தின் மதிப்பு ₹. 50,000. அதன் மீதான தேய்மானம் ஆண்டிற்கு 10%. சரிக்கட்டுப் பதிவு தருக.



## பகுதி --- III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 12 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 4 × 3 = 12

11. உரிய குறிப்பேடு என்றால் என்ன?

12. இடாப்பு என்றால் என்ன?

13. பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்யவேண்டும் என்று குறிப்பிடுக.

1 கடனுக்கு சரக்கு விற்றது

2 உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.

3 சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு.

14. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு 2018 ஜனவரி 1-ல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.

ரொக்கம் ₹ .2000 ; இயந்திரம் ₹. 50000 ; அறைகலன் ₹. 5000 ; கடனீந்தோர் ₹. 13,000

கடனாளிகள் ₹. 18,000

15. இயந்திரம் பொருத்த கூலி ₹. 8,000. கூலி கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. 31.டிசம்பர் 2016 இல் திருத்தப் பதிவினைத் தருக.

## பகுதி --- IV

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும். 3 × 5 = 15

16. பின்வரும் விவரங்களைக் கொண்டு கோவிந்தன் அறைகலன் நிறுவனத்தின் 2018 பிப்ரவரி மாதத்திற்கான விற்பனை ஏட்டினை தயார் செய்க.

| | |
|---|---|
| 2013 ஜீலை 5. | இராஜ் & கோவிற்கு கடனுக்கு விற்றது |
| | 10 மேஜைகள் மேஜை ஒன்று ₹.1,800 வீதம் |
| | 10 நாற்காலிகள் நாற்காலி ஒன்று ₹.1,000 வீதம் |
| ஜூலை 11 | ரூபி நிறுவனத்திற்கு ரொக்கத்திற்கு விற்றது |
| | 8 மேஜைகள் மேஜை ஒன்று ₹. 2,500 வீதம் |
| | 8 நாற்காலிகள், நாற்காலி ஒன்று ரூ.150 வீதம் |
| ஜூலை 15. | அலங்கார் நிறுவனத்திற்கு கடனுக்கு விற்றது |
| | 5 அலமாரிகள், அலமாரி ஒன்று ₹.5,000 வீதம் |
| | 3 மேஜைகள், மேஜை ஒன்று ₹.3,500 வீதம் |
| ஜூலை 21. | இயந்திரம் கடனுக்கு விற்றது ₹.3,000 |
| ஜூலை 25. | கோபிநாத்திற்கு கடனுக்கு விற்றது : |
| | 7 மேஜைகள், மேஜை ஒன்று ₹. 4,500 வீதம் |

17. பின்வரும் நடவடிக்கைகளை உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க ;

| 2013 | | ₹. |
|---|---|---|
| ஏப்ரல் 1 | ரமேஷ்க்கு சரக்கு விற்றது | 15,000 |
| ஏப்ரல் 5 | குமாருக்கு சரக்கு விற்றது | 12,200 |
| ஏப்ரல் 8 | சங்கர் நமக்கு சரக்கு விற்றது | 3,000 |
| ஏப்ரல்10 | குமார் திருப்பிய சரக்கு | 6,100 |
| ஏப்ரல்15 | ரமேஷ் திருப்பிய சரக்கு | 2,000 |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 23 | சங்கரிடமிருந்து சரக்கு வாங்கியது | 10,000 |

18. பின்வரும் நடவடிக்கைகளை 2017 டிசம்பர் மாதத்திற்கான, கண்ணனின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2017 ` | | ₹. |
|---|---|---|
| டிசம்பர் 1 | சுமதியிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 17,800 |
| டிசம்பர் 4 | இராணிக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,200 |
| டிசம்பர் 6 | மணியிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 7,000 |
| டிசம்பர் 10 | சரண்யாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,500 |
| டிசம்பர் 17 | ஹூசேனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13,250 |
| டிசம்பர் 21 | இரகுநாதனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| டிசம்பர் 26 | ஷியாமிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 3,000 |

19. கீழ்கண்ட நடவடிக்கைகளை விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவு செய்து, பேரேட்டில் எடுத்து எழுதுக.

| | |
|---|---|
| 2015 ஜனவரி 5 | பழுதடைந்த காரணமாக ஐந்து அலமாரிகள் ஒன்று ₹.5,000, கோபு திருப்பியது.ரொக்கம் செலுத்தப்படவில்லை. |
| ஜனவரி 25 | தரம் குறைவு காரணமாக மூன்று பாபா சூட்டுகள், ஒன்று₹. 3,500, அமீரிடமிருந்து திரும்ப பெறப்பட்டது. ரொக்கம் செலுத்தப்படவில்லை. |
| ஜனவரி 27 | அனுப்பபட்ட மாதிரிக்கேற்ப சரக்குகள் இல்லாததால், ரொக்கம் பிறகு பெற்றுக்கொள்வதாககி கூறி கண்ணன் திருப்பிய சரக்கின் மதிப்பு ₹. 23,000 |



## அலகு தேர்வு - 6

## மேல்நிலை முதலாம் ஆண்டு------- கணக்குப்பதிவியல்

# அலகு 9 - பிழைத் திருத்தம்

**காலம் : 45 நிமிடம்** **மதிப்பெண்கள் : 40**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $5 \times 1 = 5$

1. ”அறிவுச்செல்வனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை.” இது கீழ்கண்ட எப் பிழைக்கு உதாரணம்?

   (அ) விதிப்பிழை (ஆ) முழுவிடு பிழை (இ) பகுதி விடு பிழை

2. கீழ்க்கண்ட பிழைகளில், எந்தப்பிழை அனாமத்துக் கணக்கைப் பயன்படுத்தி திருத்தம் செய்யப்படும்?

   (அ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹. 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

   (ஆ) நரேந்திரனால் சரக்கு திருப்பித் தரப்பட்டது, ஏடுகளில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.

   (இ) அகிலாவால் ₹. 900 மதிப்புள்ளசரக்கு திருப்பித் தரப்பட்டது, விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹. 90 என பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. கீழ்கண்ட வாக்கியங்களைக் கருத்தில் கொள்க:

   கூற்று ( A ) : ஒரு நடவடிக்கையை, குறிப்பேட்டிலோ அல்லது துணைஏட்டிலோ பதிவு செய்யத் தவறுவது அல்லது பேரேட்டில் எடுத்து எழுதும்போது இரு தன்மைகளையும் பதிவு செய்யத் தவறுவதே பகுதி விடு பிழையாகும்.

   கூற்று ( B ) : பகுதி விடு பிழை, பொதுவாக, பேரேட்டில் எடுத்து எழுதும் போது நிகழும். இப்பிழை, ஒரு கணக்கைமட்டுமே பாதிக்கும்.

   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

   அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி ஆ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் தவறு

   இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி

4. கணினிமயமாக்கப்பட்ட கணக்கியலுக்கு பல்வேறு தொழில் நிறுவனங்கள் மாறிவிட்ட நிலையில், கீழ்க்காணும் எப் பிழைகள் தவிர்க்க முடியாதவையாகின்றன?

   (அ) பகுதி விடு பிழை (ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள் (இ) விதிப் பிழை

5. கீழ்க்கண்ட பிழைகளில் எது இருப்பாய்வைப்பாதிக்காது?

   (அ) ஒரு கணக்கில் தவறாக இருப்புக் கட்டுதல்

   (ஆ) பேரேட்டில் எடுத்து எழுதும் போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல்

   (இ) ஒரு கணக்கில்தவறாகக் கூட்டுதல்

## பகுதி --- II

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 6- க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 2 = 8$

6. ஈடுசெய் பிழைகள் என்றால்என்ன?

7. இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

   (அ) விற்பனை ஏட்டின் மொத்தத் தொகையில் ₹. 100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் ₹. 200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

8. பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்துக.

( அ ) நளியினிடமிருந்து சரக்கு ₹. 1, 500 - க்கு வாங்கியது, தவறுதலாக விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இயந்திரம் நிறுவுவதற்குச் செலுத்திய கூலி ₹.500 , கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

9. பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும்போது கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.

(அ) ₹. 1,000 ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது, பேரேட்டில் அறைகலன் கணக்கில் எடுத்து எழுதப்படாமல் உள்ளது.

(ஆ) கொள்முதல் ஏட்டின் கூட்டுத்தொகை ₹.525 முன் எடுத்து எழுதும் போது ₹. 252 என எழுதப்பட்டுள்ளது.

10. பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரித்தபின் கண்டறியப்பட்டன. அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதி பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

(அ) அருணுக்கு ₹. 125 - க்கு கடனுக்கு சரக்கு விற்றது, அருணின் கணக்கில் ₹. 152 என எடுத்தெழுதப் பட்டுள்ளது.

(ஆ) லட்சுமியிடம் கடனுக்கு ₹. 550 க்கு சரக்கு கொள்முதல் செய்தது, அவரது கணக்கில் ₹.505 என வரவு வைக்கப்பட்டுள்ளது.

## பகுதி --- III

<u>எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 11 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> $4 \times 3 = 12$

11. அனாமத்துக் கணக்குப் பற்றிக் குறிப்பு எழுதவும்.
12. ஒரு பக்கப்பிழைகள் மற்றும் இரு பக்கப்பிழைகள் பற்றிய குறிப்பு எழுதவும்.
13. பின்வரும் ஒவ்வொரு பிழையிலும் பாதிக்கப்பட்டுள்ள கணக்குகளைக் கூறவும்.

(அ) கோகிலாவுக்கு ₹. 1, 500 - க்கு கடனுக்கு சரக்கு விற்றது, விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.

(ஆ) கொள்முதல் ஏட்டின் மொத்தம் ₹. 1, 000 இருமுறை பேரேட்டில் எடுத்தெழுதப்பட்டுள்ளது.

14. பின்வரும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றை திருத்தம் செய்யவும்.

(அ) கட்டடம் மீதான தேய்மானம் ₹. 3, 000 தேய்மானக் கணக்கில் எடுத்தெழுதப்படவில்லை.

(ஆ) வெங்கட்டுக்கு ₹. 1, 000 கூலி செலுத்தியது, கூலிக கணக்கில் இருமுறை எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(இ) நிலாவுக்கு கடனுக்கு ₹. 800 - க்கு சரக்கு விற்றது, சரியாக விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்ட போதிலும், பேரேட்டில் ₹. 500 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

15. இருப்பாய்வு தயாரிக்கப்பட்டு வித்தியாசம் அனாமத்துக் கணக்குக்கு எடுத்துச்செல்லப்பட்டது எனக் கருதி பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

(அ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ₹. 200 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) கொள்முதல் ஏட்டில் ₹. 120 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏட்டில் ₹. 80 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.



## பகுதி --- IV

<u>எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும்.</u> $3 \times 5 = 15$

16. பின்வரும் பிழைகளைத் திருத்துக.

1) கொள்முதல் ஏட்டின் மொத்தம் ₹. 850 குறைவாக தூக்கி எழுதப்பட்டுள்ளது.
2) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 2,500 அதிகமாக தூக்கி எழுதப்பட்டுள்ளது.
3) கொள்முதல் ஏட்டின் மொத்தம் ₹. 7,580 - ஐ ₹. 8,570 என தூக்கி எழுதப்பட்டுள்ளது.
4) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 7,550 –ஐ ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திலெடுத்து எழுதும்போது ₹. 5,570 என தூக்கி எழுதப்பட்டுள்ளது.
5) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தம் ₹. 5,120 , ₹. 1,520 என தூக்கி எழுதப்பட்டுள்ளது.

17. கீழ்காணும் பதிவுகளைத் திருத்தம் செய்யவும்.

| | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | மதன் க/கு ப<br>ரொக்க க/ கு<br>( மதனுக்கு சம்பளம் வழங்கியது ) | | 25,000 | 25,000 |
| ஆ | கொள்முதல் க / கு ப<br>ரொக்க க / கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 5,000 | 5,000 |
| இ | அன்பு க/கு ப<br>ரொக்க க / கு<br>( வாடகை செலுத்தியது ) | | 7,500 | 7,500 |
| ஈ | ரொக்க க / கு ப<br>பாபு க / கு<br>( ரொக்க விற்பனை ) | | 12,000 | 12,000 |
| உ | விற்பனை க / கு ப<br>ரொக்க க / கு<br>( கமலுக்கு கடன் விற்பனை செய்தது ) | | 1,500 | 1,500 |

18. ஒரு கணக்காளர் இருப்பாய்வு சமன் செய்ய முடியாத பொழுது வேற்றுமைத் தொகை அநாமத்துக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. பின்னர் கீழ்க்காணும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 1,500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
2. வாணியிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹. 2,900 அவர் கணக்கு ₹. 3,000 தீர்க்கப்பட்டது, ரொக்க ஏட்டில் பதியப்பட்டுள்ளது. ஆனால் அவர் கணக்கில் பதியப்படவில்லை.
3. விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 12,000 விற்பனைத் திருப்பக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
4. வட்டி பெற்றது ₹. 1,000 , வட்டிக் கணக்கில் ₹. 100 வரவு வைக்கப்பட்டுள்ளது.

திருத்தப் பதிவுகள் தந்து, அநாமத்துக் கணக்கு தயாரிக்க.

19. ஒரு நிறுவனத்தின் கணக்காளர் இருப்பாய்வு சமன்படாமல் ₹. 922 வித்தியாசம் (கூடுதல்வரவு) இருப்பதை அறிந்தார். அவர் அந்தத் தொகையை அனாமத்துக் கணக்கில் பதிந்து விட்டு, அதைத் தொடர்ந்து பின்வரும் பிழைகளைக் கண்டறிந்தார்.

1. ரொக்க ஏட்டின் வரவுப்பக்கம் உள்ள தள்ளுபடிப்பத்தியின் கூட்டுத்தொகை ₹. 78 பேரேட்டில் எடுத்து எழுதப்படவில்லை.

2. கொள்முதல் ஏட்டின் கூட்டுத் தொகையில் ₹. 1,000 குறைவாக உள்ளது.

3. கடனுக்கு நடராஜனுக்கு ₹. 375 - க்கு சரக்கு விற்றது, விற்பனைஏட்டில் ₹. 735 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மேகலாவுக்கு கடனுக்கு ₹. 700 க்கு சரக்கு விற்றது, கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிழை திருத்தப் பதிவுகளை தந்து அனாமத்துக் கணக்கைத் தயாரிக்கவும்